செ.வெ.எண்:18 நாள்:09.02.2018

# பத்திரிக்கை செய்தி

கரூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையில் காலியாகவுள்ள 24 கால்நடை பராமரிப்பு உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு கரூர் மாவட்டத்தை சார்ந்த தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றப்படுகிறது. கல்வித்தகுதி : 10ம் வகுப்பு (Appeared for SSLC Examination), வயது வரம்பு: SCA 18-35, SC 18-35, ST 18-35, MBC18-32 BC 18-32, OC 18-30 (01.07.15 அன்றுள்ளவாறு), கால்நடைகளை கையாளத் தெரிந்திருக்க வேண்டும். மிதிவண்டி ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும்., ஊதிய விகிதம் ரூ.15900-50400, **விண்ணப்பப்படிவம் " www.karur.tn.nic.in ", வலைத்தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளவும்.** பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி: மண்டல இணை இயக்குநர் அலுவலகம், கால்நடை பராமரிப்புத்துறை, கால்நடை பெருமருத்துவமனை வளாகம், கொளந்தாகவுண்டனூர், பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் -4. விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய கடைசிநாள் 22.02.2018 பிற்பகல் 5.45 மணிக்குள் கிடைக்கும் வகையில் நேரிலோ, தபால் மூலமோ அனுப்பலாம். கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிக்கு நேர்காணல் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படுவார்கள். நேர்காணலில் அதிக மதிப்பெண்கள் பெறும் விண்ணப்பதாரர்கள் இனசுழற்சி அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள். நேர்காணல் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவில் நடைபெறும்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**